DITTO WS

Reg. No. : ......................................

Name : ...........................................

**FY-320**

# FIRST YEAR HIGHER SECONDARY MODEL EXAMINATION – 2021

Part – III

**TAMIL (Optional)**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 20 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 20 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 6 வரையுள்ள வினாக்களுக்குள் எவையேனும் மூன்றனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம். (3 × 1 = 3)**

1. ஐந்து அடிகளால் ஆன ஹைக்கூ கவிதையின் பெயர் என்ன?

(அ) சோகா (ஆ) தான்கா

(இ) கட்டவ்டா (ஈ) இரெங்கா

2. 'Blog' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையானத் தமிழ்ச் சொல் எது?

(அ) வலைப்பூ (ஆ) கடவுச்சொல்

(இ) குறியீடு (ஈ) இணையம்

3. 'எது தமிழ்ச் செல்வம்' என்ற கவிதையின் ஆசிரியர் யார்?

(அ) அருண்பாரதி (ஆ) பாரதியார்

(இ) அப்துல்ரகுமான் (ஈ) வேழவேந்தன்

DITTO WS

4. எண் வகை மெய்ப்பாடுகளுள் அடங்காதது எது?

(அ) நகை (ஆ) அழுகை

(இ) பெருமிதம் (ஈ) நட்பு

5. புதுக்கவிதை என்ற இல்ககிய வகையைத் தோற்றுவித்தவர் யார்?

(அ) வால்ட் விட்மன் (ஆ) டி.எஸ். எலியட்

(இ) எஸ்ரா பவுண்ட் (ஈ) ஷேக்ஸ்பியர்

6. ஐம்பொருங்காப்பியங்களுள் ஒன்று எது?

(அ) சிலப்பதிகாரம் (ஆ) திருக்குறள்

(இ) நாலடியார் (ஈ) நற்றிணை

**7 முதல் 14 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றோ இரண்டோ வாக்கியங்களில் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம்.**

**(4 × 2 = 8)**

7. அப்துல் ரகுமான் எழுதிய இரண்டு நூல்களை எழுதுங்கள்.

8. நகரமயமாதலினால் ஏற்படும் பாதிப்புகள் இரண்டினை எழுதுங்கள்.

9. இணையத்தினால் ஏற்படும் தீமைகள் இரண்டினை எழுதுங்கள்.

10. இயக்குனர் பாலுமகேந்திரா இயக்கிய இரண்டு திரைப்படங்களின் பெயர்களை எழுதுங்கள்.

11. குறியீட்டியல் – சிறுகுறிப்பு எழுதுங்கள்.

12. செம்மொழித் தகுதிப்பாடுகள் இரண்டினை எழுதுங்கள்.

13. எட்டுத்தொகை நூல்கள் இரண்டினை எழுதுங்கள்.

14. பின்வரும் தொடர்களுள் சரியான இரண்டு தொடர்களைத் தேர்வு செய்து எழுதுங்கள்.

(அ) பச்சைவயல் திரைக்கதையின் ஆசிரியர் மகரிஷி

(ஆ) பச்சைவயல் சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்தது.

(இ) பச்சைவயலில் தர்மு என்ற கதாப்பாத்திரம் இடம் பெற்றுள்ளது.

(ஈ) பச்சைவயலின் ஆசிரியர் அருண்பாரதி

**15 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு அரை பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம் (5 × 4 = 20)**

15. "உன் சாவில் சாம்பலை அல்ல
நெருப்பை விட்டுச் செல்
மண்ணில் ஒரு காயத்தை அல்ல
மருந்தை விட்டுச் செல்"

- என்ற அப்துல் ரகுமானின் பாடல் வரிகளை விமர்சித்து விமர்சனக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

16. 'எது தமிழ்ச் செல்வம்' என்ற கவிதையில் வேழ வேந்தன் அவர்கள் கூறும் தமிழ் இலக்கியங்கள் நான்கினை எழுதுங்கள்.

17. "அறிமுகம் இல்லாத கைகளால்
கண்ணீர் துடைக்கப்பட்டவனே
சக மனிதனின்
ஒரு கண்ணீர்த் துளியையாவது
நீ துடைத்திருக்கிறாயா?"

-எனும் கவிஞர் அப்துல் ரகுமானின் வரிகளுக்கு விவாதக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

DITTO WS

18. வலைத்தளங்களைச் சரியாகவும், பாதுகாப்பாகவும் பயன்படுத்துவதன் அவசியத்தை எடுத்துக் கூறி துண்டு பிரசுரம் தயார் செய்யுங்கள்.

19. மொழியியல் – குறிப்பு எழுதுங்கள்.

20. பின்வரும் பழமொழிகளை விளக்கி எழுதுங்கள்.

(அ) யானைக்கும் அடி சறுக்கும்

(ஆ) பருவத்தே பயிர் செய்

21. சங்க கால மக்கள் 'இயற்கையோடு இணைந்து வாழ்ந்தார்கள்' என்பதை சங்க இலக்கியப் பாடல் வாயிலாக விளக்கி எழுதுங்கள்.

22. தமிழக நாட்டுப்புறக் கலைகள் நான்கினைப் பட்டியலிடுங்கள்.

23. பின்வரும் சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுங்கள்.

இனிமை, பழமை, எந்தை, நுந்தை, எட்டு, பத்து, மந்தி, தொகை

24. உங்கள் பள்ளியில் 'சங்க இலக்கியங்களில் பண்பாடு' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இதன் நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளன. அதற்கான அறிக்கை தயார் செய்யுங்கள்.

நாள் : 28/7/21

இடம் : பள்ளி வளாகம்

வரவேற்புரை : தலைமை ஆசிரியர்

தலைமையுரை : பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர்

தொடக்கவுரை : கவிஞர் அருண்பாரதி

**25 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்கு எவையேனும் மூன்றனுக்கு ஒரு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 5 வீதம். (3 × 5 = 15)**

25. புதுக்கவிதையின் தோற்றம் குறித்து விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

26. ‘சங்க கால மக்களின் விருந்தோம்பல் பண்பு’ என்ற தலைப்பில் வானொலி உரை தயார் செய்யுங்கள்.

27. வலைப்பூவின் சிறப்பினை எடுத்துக்கூறி, உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.

28. உங்கள் பள்ளி இலக்கிய மன்றம் சார்பாக நிகழும் கலை விழாவினைத் துவங்கி வைப்பதற்காக கவிஞர் பா.விஜய் அவர்கள் வருகை தர உள்ளார். அவரை நேர்காணல் நடத்த ஐந்து வினாக்கள் கொண்ட வினாநிரல் தயார் செய்யுங்கள்.

29. உங்கள் பள்ளியில் ‘வாழ்வை மேம்படுத்த உதவுவது அற இலக்கியமா? பக்தி இலக்கியமா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற உள்ளது. ஏதேனும் ஓர் அணியில் பேசப் பட்டிமன்றக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

30. புறநானூறு – குறிப்பு தயார் செய்யுங்கள்.

***31 முதல் 36 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம்.*** **(3 × 6 = 18)**

31. “கருத்துப் பரிமாற்றத்திற்கான கருவி மட்டுமே மொழி” – இக்கூற்றினை விளக்கி எழுதுங்கள்.

32. ஒலியுறுப்புகளும் அதன் தொழில்களும் என்ற தலைப்பில் விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

33. உங்கள் பள்ளி அறிவியல் மன்றத்தில் ‘இணையமும் இளைய தலைமுறையினரும்’ என்ற தலைப்பில் சொற்பொழிவு நடைபெற உள்ளது. அதற்கான சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.

34. பின்வரும் பாடலை நயம்பாராட்டி எழுதுங்கள்.

“என்ன உங்கம் தமிழ்ச் செல்வம்
என்றே கேட்கும்
எதிரிகட்கே இதைப்பதிலாய்ச்
சொல் நீ நண்பா!
முன்னையிங்கே பன்மொழிகள்
மண்ணின் மீது
முளைத்தாலும் மூத்தமொழி
தமிழில் உள்ள
முன்னல்நேர் இலக்கியங்கள்
தமிழில் உள்ள
கன்னல்நேர் இலக்கயியங்கள்
தனித்தேநின்று
காட்டுகின்ற ஒளிமணிகள் ஒன்றி
ரண்டா

35. உங்கள் பள்ளி மலரில் வெளியிட ‘தோல்பாவைக் கூத்தும் நுனுக்கங்களும்’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

36. போரின் தீமைகளைச் சுட்டிக் காட்டி, போரின்றி வாழ்வோம் என்ற தலைப்பில் பத்திரிக்கைக்கு அனுப்பத் தலையங்கம் தயார் செய்யுங்கள்.

**37 முதல் 40 வரையுள்ள வினாக்களுக்கு எவையேனும் இரண்டனுக்கு இரு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம். (2 × 8 = 16)**

37. மானுடம் என்ற கவிதையைப் படித்த நீங்கள் இக்கவிதையை அடிப்படையாகக் கொண்டு ‘இயற்கையும் மனிதனும்’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்பு : அன்றைய வாழ்க்கை முறை
இன்றைய வாழ்க்கை முறை
இயற்கை பேரழிவு
இயற்கையைப் பாதுகாத்தல்

38. தங்க மீன்கள் திரைப்படத்தில் வரும் கல்யாணி கதாப்பாத்திரத்தின் பண்பு நலன்களைத் திறனாய்வு செய்து எழுதுங்கள்.

குறிப்பு : மனித நேயப் பண்பு மிக்கவர்

படிக்காதவர்

சிறந்த தந்தை

பணத்தை விட உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்

39. உங்கள் பள்ளி ஆண்டு விழாவில் 'தமிழ் மொழியின் தொன்மை' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. அதில் பங்கு பெற கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்பு – தொன்மையான மொழி

- இலக்கிய வளம் நிறைந்தது

இலக்கண வளம் நிறைந்தது

பிறமொழி கலவாமை

40. உங்கள் பள்ளி இலக்கிய இதழில் வெளியிட 'மொழியில் பயன்பாடு' என்ற தலைப்பில் சிறப்புக் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்பு – மொழியப்படுவது மொழி

- சிந்தனையை வெளியிட உதவுதல்

கருத்தை வெளியிட உதவுதல்

பேச்சு மொழி, இயல்பு மொழி

---